

சங்கரன்கோவிலில் ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் திடீர் சாலை மறியல் போராட்டம் நடந்தது.

# ஆதித்தமிழர் பேரவை திடீர் மறியல்
# சங்கரன்கோவிலில் போக்குவரத்து பாதிப்பு

**சங்கரன்கோவில், செப் 26—**

சங்கரன்கோவிலில் நேற்று ஆதித்தமிழர் பேரவையினர் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் 30 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.


சங்கரன்கோவிலில் நேற்று ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் திருச்செங்கோடு பகுதியில் அருந்ததியர் இன பெண் காயத்ரி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்று திடீர் சாலை மறியல் போராட்டம் நடந்தது. காலை 11 மணியளவில் ஆதித்தமிழர் பேரவையின் மாவட்ட அமைப்பு செயலாளர் ஆதிசக்தி, மாவட்ட அமைப்பாளர் கதிரவன், நகர செயலாளர் அருந்ததியன் ஆகியோர் தலைமையில் 24 பேர் காமராஜர் நகரில் இருந்து சங்கரன்கோவில் பஸ் ஸ்டாண்டிற்கு ஊர்வலமாக வந்தனர். பின்னர் பஸ் ஸ்டாண்ட் முன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பஸ் ஸ்டாண்ட் முன் ஊர்க்காவல் படையினர் மட்டுமே போக்குவரத்து சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். போலீசார் இல்லாததால் மறியலில் ஈடுபட்டவர்களை உடனடியாக அப்புறப்படுத்த முடியவில்லை. சுமார் 20 நிமிடங்கள் கழித்து வந்த போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்தினர். அப்போது போராட்டக்காரர்கள் போலீசாருக்கு டிமிக்கி கொடுத்து பஸ்களை ஓடி, ஓடி சென்று மறித்தனர். அப்போது பஸ்சுக்கு முன் படுத்தும் போராட்டக்காரர்கள் மறியலில் ஈடுபட்டனர். பின்னர் மறியலில் ஈடுபட்டவர்களை டி.எஸ்.பி., கலிபுல்லா தலைமையிலான போலீசார் கைது செய்தனர். மறியல் போராட்டம் காரணமாக சங்கரன்கோவிலில் சுமார் 30 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# சங்கரன்கோவிலில் சாலை மறியல்

சங்கரன்கோவில், செப். 25: திருசெங்கோட்டில் ஆதித்தமிழர் பேரவையினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் போலீஸார் தடியடி நடத்தியதை கண்டித்து சங்கரன்கோவிலில் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்ட 24 பேரை போலீஸார் கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம், திருசெங்கோட்டில் காயத்ரி என்ற பெண் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டாராம். இதற்கு கண்டனம் தெரிவித்து ஆதித்தமிழர் பேரவையினர் திங்கள்கிழமை திருசெங்கோட்டில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது போலீஸார் அவர்கள் மீது தடியடி நடத்தினார்.

இதற்கு கண்டனம் தெரிவித்து செவ்வாய்க்கிழமை ஆதித்தமிழர் பேரவையினர் சங்கரன்கோவில் பஸ்நிலையம் முன் மாவட்ட அமைப்புச் செயலர் ஆதிசக்தி தலைமையில் மறியலில் ஈடுபட்டனர். அப்போது போலீஸார் யாரும் அப்பகுதியில் இல்லை. 3 முக்கியச் சாலைகள் சந்திக்கும் இடத்தில் அவர்கள் அமர்ந்து மறியலில் ஈடுபட்டதால், ஏராளமான பஸ் உள்ளிட்ட வாகனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டன. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



சங்கரன்கோவிலில் பஸ்நிலையம் முன் மறியலில் ஈடுபட்ட ஆதித்தமிழர் பேரவையினர்.

சம்பவ இடத்துக்கு வந்த சங்கரன்கோவில் டி.எஸ்.பி. கலிபுல்லா மற்றும் போலீஸார் மறியலில் ஈடுபட்டவர்களை கைது செய்து அரசு பஸ்ஸில் ஏற்றினர்.

பஸ்ஸில் ஏற மறுத்த போராட்டக்காரர்களை குண்டுக் கட்டாகத் தூக்கி பஸ்ஸில் ஏற்றினர்.

இதையடுத்து மறியலில் ஈடுபட்டதாக 24 பேரை போலீஸார் கைது செய்தனர்.

### திருச்செங்கோடு சம்பவத்தை கண்டித்து

# சங்கரன்கோவிலில் ஆதிதமிழர் பேரவை மறியல்

## 25 பேர் கைது



சங்கரன்கோவிலில் மறியலில் ஈடுபட்ட ஆதிதமிழர் பேரவையினரை கைது செய்து போலீசார் பஸ்சில் ஏற்றினர். அப்போது அவர்கள் கோஷங்களை எழுப்பவே ஆத்திரமடைந்த போலீசார் அவர்களிடமிருந்து கொடிகளை பிடுங்கி எறிந்து, அவர்களை கண்டித்தார்.

சங்கரன்கோவில், செப். 26: திருச்செங்கோடு சம்பவத்தை கண்டித்து சங்கரன் கோவிலில் மறியலில் ஈடுபட்ட ஆதிதமிழர் பேரவையினர் 25 பேரை போலீசார் கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் தனியார் மகளிர் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்த மாணவி காயத்ரி, விடுதியில் மர்மமான முறையில் தூக்கில் இறந்தார். இந்த சம்பவத்தை கண்டித்தும் இதுதொடர்பாக மறியலில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தியதை கண்டித்தும் ஆதிதமிழர் பேரவை சார்பில் சங்கரன்கோவிலில் நேற்று சாலை மறியல் நடந்தது.

மாநில அமைப்பு செயலாளர் ஆதிசக்தி தலைமையில் நகர செயலாளர் அருந்ததியன், மாவட்ட செயலாளர் கதிரவன் உள்ளிட்ட 25 பேர் சங்கரன் கோவில் காமராஜர் நகரில் இருந்து ஊர்வலமாக வந்து பஸ் நிலையம் எதிரே சாலையில் மறியலில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு டி.எஸ்.பி. கலிபுல்லா, இன்ஸ்பெக்டர் செல்வகுமார், போக்குவரத்து சப்–இன்ஸ்பெக்டர் பிரபு மற்றும் போலீசார் சுமார் 30 நிமிட தாமதத்திற்கு பின்னர் வந்தனர். அவர்கள் மறியலில் ஈடுபட்டவர்களிடம் கலைந்து செல்லும்படி கூறினர். ஆனால் அவர்கள் சாலையில் படுத்து தங்களது போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால் போலீசார் அவர்களை குண்டுகட்டாக தூக்கி கைது செய்து அரசு பஸ் மூலம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சுமார் 45 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## கொடிகளை பறித்த போலீசார்

மறியல் நடந்த இடம் அருகே புறக்காவல் நிலையம் உள்ளது. ஆனால் அப்போது பாதுகாப்பு பணியில் போலீசார் இல்லை. ஊர்க்காவல் படை வீரர்கள் 2 பேர் மட்டுமே இருந்தனர். மறியல் நடந்தபோது அவர்களால் மறியலை கட்டுப்படுத்த முடியவில்லை. 30 நிமிடம் கழித்த பின்னரே போலீசார் அங்கு வந்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். கைது செய்யப்பட்டவர்களை போலீசார் வாகனத்தில் குண்டு கட்டாக அரசு பஸ்சில் அழைத்துச்சென்றபோது மறியலில் ஈடுபட்டவர்கள் கையில் கொடிகளுடன் கோஷங்கள் எழுப்பினர். இதனால் ஆத்திரமடைந்த போலீசார் கொடிகளை பிடுங்கி எறிந்து அவர்களை திட்டினர்.